நல்லூர் இளை நூலகம்
யாழ்ப்பாணம்


# முரசொலி

பக்கங்கள் ஆறு விலை ரூபா 5.00

முரசு 06 ஒலி 10 பிரசோற்பத்தி பங்குனி 03 (16.03.1992) திங்கள்


## எதிரணியின் பாதயாத்திரை ஓர் ஈழப்பொறியாம்!

தெற்கில் எதிர்க்கட்சிகளினால் ஒழுங்கு செய்யப்பட்ட பாதயாத்திரையில் சில தமிழ் குழுக்களும் பங்கு பற்றுவதை சிங்கள தீவிரவாத அமைப்புகள் கண்டித்து நேற்று அறிக்கைகள் விடுத்துள்ளன இந்த பாதயாத்திரை ஓர் ஈழப் பொறி என அவை வர்ணித்துள்ளன பாதயாத்திரை குறித்து குறிப்பிட்ட இந்த சிங்கள தீவிரவாத அமைப்புகள், பாதயாத்திரை மூலம் தெற்கில் குழப்ப நிலை ஏற்படும் எனவும் இதனால் வடக்கு கிழக்கில் பணி புரியும் இராணுவத்தினரை தென்பகுதிக்கு அழைக்கும் நிலை தோன்றும் எனவும் எச்சரித்துள்ளன படையினரின் பற்றாக்குறையை

— 06 ஆம் பக்கம் பார்க்க

# ஜனாதிபதி வீடமைப்பு நிதியப்பணம் இராணுவத்திற்கு செலவிடப்பட்டது!

## அத்தியாவசிய சேவைகளுக்கும் சிறுதொகைப்பணம் எடுக்கப்பட்டது

வீடமைப்புத் திட்டத்திற்கான ஜனாதிபதி நிதியத்தின் பெரும் பகுதி பாதுகாப்புத் தேவைகளுக்காக ஒதுக்கப்பட்டு செலவு செய்யப்பட்டு விட்டதாக நேற்றைய சண்டே ரைம்ஸ் பத்திரிகைச் செய்தி வெளியிட்டுள்ளது.

வீடமைப்புத் திட்டத்திற்கென ஜனாதிபதி நிதியம் கடந்த இரு வருடங்களில் அதிஷ்டலாப சீட்டுகள் மூலம் பெரும் பணத்தை பெற்றிருந்தது இந்நிதி வீடமைப்பு திட்டம் மற்றும் கிராமோதைய திட்டம் ஆகியவற்றுக்கே பயன்படுத்தப்படும் என அப்போது தெரிவிக்கப்பட்டது.

எனினும் கடந்த வருடத்தில் பாதுகாப்புச் செலவினம் அதிகரித்ததைத் தொடர்ந்து ஜனாதிபதி வீடமைப்பு நிதியத்திலிருந்த பெருந்தொகைப் பணம் இராணுவத்திற்கென செலவானது.

இதைத்தவிர கல்வி, ஆஸ்பத்திரி போன்ற அத்தியாவசிய சேவைகளுக்கும் இந்த நிதியத்திலிருந்து சிறுதொகைப் பணம் செலவிடப்பட்டதாக சண்டே ரைம்ஸ் கூறுகிறது

### அனுராபண்டாரநாயக்கா அறிவிப்பு

## தெரிவுக்குழு யாழ். செல்வதை சுதந்திரக்கட்சி எதிர்க்காதாம்

புலிகளின் அழைப்பை ஏற்று பாராளுமன்ற தெரிவுக்குழு யாழ்ப்பாணம் செல்ல நேர்ந்தால் அதை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எதிர்க்காது என அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

சமாதானத்திற்கான இறுதி முயற்சியாக யாழ்ப்பாணம் செல்வதில் தவறில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை பாராளுமன்றத் தெரிவுக்குழுவை யாழ். வருமாறு புலிகள் விடுத்த அழைப்பிற்கு கொழும்பிலுள்ள தமிழ்குழுக்கள் கண்டனம் தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளன.

## பருத்தித்துறை கரையில் ஹெலி வட்டமிட்டது

பருத்தித்துறை துறைமுகத்தை அண்டிய கடற்கரைப் பகுதிகளில் ஹெலிகப்டர் ஒன்று நேற்று நண்பகல் பலதடவை வட்டமிட்டு சென்றது. இவ்வேளையில் கடற்கரைப்பகுதியில் மீனவர்கள் கடலுக்கு

—06 ஆம் பக்கம் பார்க்க

### ★ தெரிவுக்குழு யாழ் வருவதற்கு

## எழுத்துமூலமான கோரிக்கையை புலிகள் சமர்ப்பிக்க வேண்டுமாம்

பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு விடுதலைப் புலிகளின் கோரிக்கை எழுத்து மூலம் நேரடியாக அனுப்பப்பட வேண்டும். அப்படியானால் மாத்திரமே அதனைத் தெரிவுக்குழு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும்.

விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாட தெரிவுக்குழுவின் தூதுக்குழு ஒன்றினை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைப்பதா? அல்லது தெரிவுக்குழு முன் தோன்றி புலிகள் தம் நிலைப்பாடு குறித்து விளக்க அனுமதியளிப்பதா என்ற விடயம் குறித்து புலிகள் நேரடியாக உத்தியோக பூர்வமாகத் தெரிவுக்குழுவுடன் தொடர்பு கொண்ட பின்னரே முடிவு செய்யப்படும் என விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்ததாக கொழும்பு தினசரி ஒன்று நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

### கிறிஸ்தவ குழுவிடம் புலிகள் எடுத்துரைப்பு

## அரசு யுத்தத்தை நிறுத்தினால் புலிகளும் நிறுத்திக்கொள்வர்

யாழ்ப்பாணம் வந்த கிறிஸ்தவ நல்லெண்ணக்குழுவிற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான பேச்சுகள் நேற்று நடைபெற்றன.

பேச்சுகளின்போது, தமிழ் மக்களின் தற்போதைய நிலையை தென்பகுதிக்கு சென்று விளக்குமாறு புலிகள் தரப்பில் கேட்டுக்கொள்ளப்பட்டது.

சமாதானம் ஏற்பட முதற்கட்டமாக யுத்த நிறுத்தம் ஒன்று ஏற்படவேண்டும் என்பதை கிறிஸ்தவ நல்லெண்ணக்குழுவினர் வலியுறுத்தினர்.

ஸ்ரீலங்கா அரசு யுத்தத்தை நிறுத்தினால் புலிகளும் தமது தாக்குதல்களை நிறுத்துவர் என அப்போது புலிகள் தரப்பில் விளக்கப்பட்டது.

நேற்றைய பேச்சுகளில் புலிகள் தரப்பில் அரசியல் ஆலோசகர் அன்ரன்பாலசிங்கம், விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி செயலர் யோகி ஆகியோர் கலந்துகொண்டனர்.

### இரு புலிப் போராளிகள்

## பொலிஸ் ஜீப் மீது தாக்கு 2 இன்ஸ்பெக்டர்கள் பலி

மட்டக்களப்பில் நேற்று பொலிஸ் ஜீப் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இரு பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் பலியாகினர்.

விடுதலைப்புலிப் போராளிகள் இருவரே இந்த ஜீப் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக பி.பி.ஸி தெரிவித்தது.

இச்சம்பவத்தில் இரு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் காயமடைந்தனர்.

## காரைநகரில் படையினர் சூட்டில் இடது காலை இழந்த வயோதிபர்

காரைநகரில் கடந்த ஆண்டு இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இடது காலை இழந்த கந்தமுத்து நடராசா (60) என்ற வயோதிபர் நேற்று அங்கிருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் யாழ்ப்பாணம் வந்தார்

துப்பாக்கிச்சூடு இடம்பெற்றதையடுத்து போதிய சிகிச்சையளிக்கப்படாததால் தனது இடது கால் துண்டிக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும், சிகிச்சை பெறவே இங்கு வந்ததாகவும் அவர் தெரிவித்தார்

படையினர் வந்த போது சிவன் கோயில் பகுதிக்கு மக்கள் சென்று கொண்டிருந்த போது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் சிவன் கோவிலடிப் பகுதியைச் சேர்ந்த ஐவர் கொல்லப்பட்டதாகவும் பலர் காயமடைந்ததாகவும் அவர் மேலும் சொன்னார்

07

## இராணுவ கப்டன் மீது பயங்கரவாத தடைச்சட்ட வழக்கு

பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் இராணுவ கப்டன் ஒருவர் மீது அநுராதபுர மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது

கப்டன் தர்மஸ்ரீ நிசங்க என்பவர் ஜே.வி.பி தலைவர் சோமவன்ஸ அமரசிங்கா 1990 ஏப்ரல் மாதத்தில் நாட்டைவிட்டு வெளியேறமுன்பு அவர் பற்றித் தெரிந்து இருந்தும் பொலிஸாருக்கு தகவல் தரவில்லை எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

இம்மாதம் 26 ஆம்திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது

### புதுவை இரத்தினதுரை பேச்சு

## களத்திலும் காவலரணிலும் வெளியான பாடல்கள்

களத்திலுள்ள போராளிகளால் பாடப்பட்ட களத்தில் நின்ற வேங்கைகள் ஒலிப்பதிவு நாடா நேற்று வெளியிட்டு வைக்கப்பட்டது.

நாடாவை வெளியிட்டு வைத்து புதுவை இரத்தினதுரை பேசுகையில், இப்பாடல்கள் காவலரண்களிலும் களத்திலும், போராளிகளின் பாசறையிலும் தோன்றியவை தமது எண்ணங்களை மற்றைய தலைமுறைக்கு இதன் மூலம் போராளிகள் விளக்கியுள்ளனர் என்றார்.

நிகழ்ச்சியில் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

## 5 வருடங்களுக்குப் பின் பஞ்சாப் சட்டசபை கூடுகிறது

பஞ்சாப் மாநில சட்டப் பேரவையின் பட்ஜட் கூட்டத்தொடர் இன்று தலைநகர் சண்டிகாரில் தொடங்குகிறது.

இன்று தற்காலிக சபாநாயகர் புதிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைப்பார். நாளை சபாநாயகர் தேர்தல் நடைபெறும். நாளை மறுதினம் புதன்கிழமை மாநில ஆளுநர் சுரேந்திரநாத் உரையாற்றுவார்.

வரவு - செலவு அறிக்கை 30 ம் திகதி சமர்ப்பிக்கப்படும் ஐந்து வருட ஆளுநர் ஆட்சிக்குப்பின் இச்சட்டப் பேரவை கூடுகிறதாக ஏஜென்ஸிச் செய்தி தெரிவித்தது

# பரு. சுகாதார வார நிகழ்ச்சிகள் இன்று நிறைவு

பருத்தித்துறை நகரசபையின் சுகாதார வார நிகழ்ச்சிகளை பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் திரு. க.சண்முகநாதன் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைத்தார்.

சனசமூக நிலையங்களின் அனுசரணையுடனும் பொதுமக்களின் ஒத்துழைப்புகளுடனும் கடந்த 9 ஆம் திகதி ஆரம்பமான இச் சுகாதார 3 வார நிகழ்ச்சிகள் இன்று வரை நடைபெறவுள்ளன,

இச் சுகாதார வாரத்தின் போது பருத்தித்துறை நகரசபைப் பகுதியின் பல்வேறு பகுதிகளிலும் சிரமதானங்கள், சுற்றாடல் சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகள், சுகாதாரக் கருத்தரங்குகள் என்பன நடைபெற்று வருகின்றன. (11)

# கண்டியில் விபுலானந்தர் விழா

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு கண்டி தமிழியல் கழகம் விரிவான ஆய்வரங்கு ஒன்றினை எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கண்டியில் நடத்தவுள்ளது.

# மழைபெய்யும் சாத்தியம் அவதான நிலையம் அறிவிப்பு

'தெற்கில் அடுத்த வாரமளவில் மழைபெய்யக்கூடும், தற்போதைய காலநிலை அதனைக் காட்டுகிறது'

இவ்வாறு வானிலை அவதான நிலையப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

மலையகத்தில் தொடர்ந்து நிலவும் வறட்சியால் தேயிலைச் செடிகள் கருகும் அபாயம் தோன்றியுள்ளது என்பதும் தெரிந்ததே.

# உலகக் கிண்ண கிரிக்கெட்; 'முரசொலி' வினாவிடை போட்டி

தற்பொழுது நடைபெற்று வரும் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர்பாக வாசகர்களுக்கான போட்டியொன்றை நடத்த முரசொலி முன்வந்துள்ளது.

கீழே தரப்படும் வினாக்களுக்கு விடையளிப்பதன் மூலம் நீங்களும் இப் போட்டியில் கலந்து கொள்ள முடியும்.

போட்டிக்கான வினாக்கள் இவைதான்:—

(1) ஐந்தாவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் முதலாவது இடத்தைப் பெறப்போகும் நாடு எது?

(2) இரண்டாவது இடத்தை பெறப்போகும் நாடு எது?

(3) இத் தொடரில் சிறந்த வீரருக்கான பரிசைப் பெறப்போவது யார்?

(4) இறுதிப் போட்டியில் சிறந்த வீரருக்கான பரிசை பெறப்போவது யார்?

(5) முதலாவது உலகக் கிண்ணப் போட்டி
(அ) எங்கு நடைபெற்றது?
(ஆ) எப்பொழுது நடைபெற்றது?

★ இப் போட்டியில் முரசொலியில் கடமையாற்றுபவர்களைத் தவிர்ந்த எவரும் பங்குபற்றலாம்

★ விடைகள் யாவும் முரசொலியில் பிரசுரமாகும் படிவங்களிலேயே அனுப்பப்பட வேண்டும்,

★ ஒருவர் எத்தனை விடைகளையும் அனுப்பலாம்.

★ ஆனால் கீழ்வரும் படிவத்தில் மட்டுமே அனுப்பப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| முதலாம் பரிசு:- | ரூபா. | 250 |
| இரண்டாம் ,, | ,, | 150 |
| மூன்றாம் ,, | ,, | 100 |

விடைகள் இம்மாதம் 23 ஆம் திகதிக்கு பிந்தாமல் முரசொலிக்கு நேர்முகமாகவோ அல்லது தபால் மூலமோ சேர்ப்பிக்கப்பட வேண்டும் கடித உறையில் ''உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டி'' எனக் குறிப்பிடட வேண்டும்.

குறிப்பு:- சரியான விடைகள் பல கிடைக்குமிடத்து குலுக்கல் முறையில் பரிசில்கள் தீர்மானிக்கப்படும்.

---

**உலகக் கிண்ண கிரிக்கெட் முரசொலி வினாவிடைப் போட்டி**

பெயர்: ..............................................................

முகவரி: ..............................................................

..............................................................

மாணவராயின் பாடசாலையின் பெயர்: ..............................................

விளையாட்டுக் கழக அங்கத்தவராயின் கழகப் பெயர்; ..............................................

.......................... ..........................

திகதி கையொப்பம்

★ கச்சக்கொடிச் சந்தியில சம்பவம்

# புலிகளின் தாக்குதலால் படையினர் இருவர் காயம்

வவுனியா- கச்சக்கொடிச் சந்தியில் விடுதலைப்புலிகள் நேற்று முன்தினம் நடத்திய தாக்குதலில் இரு படையினர் காயமடைந்தனர் என்று கொழும்பு வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன,

இதனையடுத்து ஷெல் வீச்சுக்களும் இடம்பெற்றதாகவும் வடபகுதிப் பயணிகள் எவரும் நேற்று முன்தினம் வவுனியா வரவில்லையென்றும் ஆனால் வவுனியாவிலிருந்து தாண்டிக்குளம் ஊடாக வடபகுதி செல்லும் பயணிகள் அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பௌர்ணமி அரங்கிசை

மாதம் தோறும் பௌர்ணமி தினத்தன்று நல்லூர் மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் நடைபெறும் தீபஅரங்கிசையில் எதிர்வரும் புதன்கிழமை மாலை 6.30 மணிக்கு இளங்கலைஞர் பிரம்மஸ்ரீ மகாதேவ சோமசுந்தரசர்மா அவர்களின் வீணையிசை பக்கவாத்திய சகிதம் இடம்பெறவுள்ளது.

## சதாம்பற்றி புஷ்

''இந்த ஆளுக்கு வெட்கமே கிடையாது'' என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் 'நியூஸ்வீக்' இதழுக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

## பொதுக் கூட்டம்

யாழ் அங்கவீனர் புனர்வாழ்வுச் சங்கப் பொதுக் கூட்டம் தலைவர் திரு அ. குணசிங்கம் தலைமையில் கில்னர் மண்டபத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

## தொடர் ஷெல்லினால் தொல்லை

குருநகர்ப் பகுதியில் வாழும் மக்களில் பெரும்பாலானோர் மண்டைதீவில் இருந்து தொடர்ந்து ஏவப்படும் ஷெல்வீச்சினால் உருவான பீதிகாரணமாக மாலையானதும் தமது பிரதான பொருட்களுடன் நாள்தோறும் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்று இரவு நேரங்களைக் கழித்து வருகின்றனர்.

பெரும்பாலான மக்கள் யாழ் சம்பத்திரிசியார் கல்லூரியிலும், பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள பாடசாலைகளிலும் இரவை கழித்துவிட்டு அதிகாலை நேரத்தில் கொட்டும் பனியில் தமது குழந்தைகளை சுமந்து கொண்டு தமது இருப்பிடங்களுக்கு திரும்பி வருவது இவர்களது நாளாந்த நிகழ்வாக உள்ளது (15)

## செருப்படிபற்றி எம். பி.

''நாளை நாம் மீண்டும் மக்களிடம் சென்று எங்களுக்கு ஓட்டுப் போடுங்கள் என்று கேட்டால் செருப்பால் அடிப்பார்கள்'' என்று இந்தியன் எக்ஸ்பிரசுக்கு அளித்த பேட்டி ஒன்றில் இந்திரஜித் குப்தா எம். பி. கூறியுள்ளார்.

## மெய்வல்லுநர் போட்டி

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை பி. பகல் 1 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி பொ. சிவபாலன் கலந்து கொள்வார். பரிசில்களை திருமதி கமலாவதி சிவபாலன் வழங்குவார்.

# கல்வி பூரணத்துவ வாழ்வுக்கு வழிவகுக்க வேண்டும்

''மாணவர்களை பரீட்சைக்குத் தயார் செய்யும் தொழிற்சாலைகளாக மாத்திரம் பாடசாலைகள் இயங்கக்கூடாது கல்வியைப் பரீட்சைகளில் சித்தியடைவதற்காக மட்டுமன்றி முழுவாழ்க்கையின் தேவைக்காகவும் போதிக்கப்பட வேண்டும். இதனை நன்குணர்ந்து ஆசிரியர்கள், பெற்றோர்கள், மற்றும் நலன் விரும்பிகள் செயற்பட வேண்டும்.''

இவ்வாறு கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் இடம் பெற்ற மெய்வல்லுநர் போட்டியில் பிரதமவிருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய யாழ் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் த. துரைசிங்கம் குறிப்பிட்டார்

சிறப்பு விருந்தினராக நிலையத் தலைவர் பொ. இராமநாதனும் கலந்து கொண்டார் 47

# 'அனாதரட்சகி' பட்டமளித்து துர்க்கை ஆலயத்தில் கௌரவம்

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய மண்டபத்தில் தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க மகளிர் அமைப்பால் நேற்றுமுன் தினம் மாலை நடத்தப்பட்ட சர்வதேச மகளிர் தின விழாவில் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ''அனாதரட்சகி'' என்னும் பட்டமளித்து கௌரவிக்கப்பட்டார்.

மகளிர் அமைப்பின் தலைவியான திருமதி வைதேகி கந்தையா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கம்பன் கழக அமைப்பாளர் ஜெயராஜ், தொழிலதிபர் கனகராசா, இராமநாதன் கல்லூரியின் முன்னைநாள் அதிபரான திருமதி யோ. இராசரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள்.

இவ்விழாவில் மகளிர்தின விழா போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டதோடு பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (21)

# ஊரெழு அணியை பாடுமீன் வெற்றி கொண்டது

யாழ் மாவட்ட விளையாட்டுத்துறை அபிவிருத்திக் குழுவினால் நடத்தப்படும் உதைபந்தாட்டப்போட்டி நேற்று முந்தினம் யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் இடம்பெற்ற பொழுது குருநகர் பாடுமீன் அணி அதனை எதிர்த்தாடிய ஊரெழு றோயல் அணியை 2:1 என்ற கோல்களால் வென்றது

இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் கலைவாணி அணியை எதிர்த்து சென் நீக்கலஸ் அணி ஆடும்

வலிகாமம் கிழக்கு, வலிகாமம் மேற்கு, தென்மராட்சி என மூன்று பிரிவுகளாக நடக்கும் இப்போட்டியில் 61 விளையாட்டுக்கழகங்கள் கலந்து கொள்கின்றன

வலிகாமம் கிழக்குப்பிரிவின் போட்டிகள் அனைத்தும் யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்திலும், வலிகாமம் மேற்குப் பிரிவின் போட்டிகள் இந்துவரோதயாக் கல்லூரி மைதானத்திலும். தென்மராட்சிப் போட்டிகள் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்திலும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும் நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகிறது. 16

பணிப்பாளர் 'சுந்தர்' பெருமிதம்

# இடர்வேளையிலும் வடக்கின் கல்வித்தரம்; தெற்கில் வியப்பு

''குண்டு வீச்சுக்கு இலக்காகிப் பாடசாலைகள் சேதமடைந்த நிலையிலே காணப்படுகின்றன எனினும் தெற்கில் உள்ளவர்கள் வியக்கத்தக்கவகையிலே யாழ் பாடசாலைகள் திறமையாக இயங்கி வருகின்றன, பரீட்சையிலும் சரி உடற்பயிற்சியிலும் சரி நாம் சளைத்தவர்கள் அல்லர் என இன்று யாழ் மாவட்ட மாணவர்கள் தமது திறமைகளைக் காட்டியுள்ளனர்.''

இவ்வாறு யாழ் பிராந்தியக் கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கான உடற்பயிற்சிப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்

உடற்பயிற்சிக் கல்வி அதிகாரி திரு. நாகமணி தலைமையில் இப்போட்டி நடைபெற்றது 35

# பாத யாத்திரை தொடர்கிறது

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் போரின் கொடுமையால் வாடும் தமிழ் மக்களின் துயர் தீர வேண்டி இந்து சமயப் பேரவையால் சென்ற 6 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட பாதயாத்திரை தொடர்ந்து நடைபெற்றுவருகின்றது.

நேற்று 10-ஆம் நாளாக கோண்டாவில் பகுதியில் உள்ள ஆலயங்களுக்கு நூற்றுக்கணக்கான சைவப் பெரியார்கள் கூட்டுவழிபாட்டுடன் சென்றனர் இவர்களுக்கு கோண்டாவில் மஞ்சத்தடி முருகன் ஆலயத்தில் மதிய போசனம் வழங்கப்பட்டது.

இன்று கொக்குவில் பகுதியில் ஆலயங்களுக்கு பாதயாத்திரை ஊர்வலம் செல்லும் என்றும் பொற்பதி விநாயகர் ஆலயத்தில் இருந்து இப்பாதயாத்திரை ஆரம்பமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டது. 47

## இனப்பிரச்சினைக்கு
# சமஷ்டித் தீர்வை நோக்கி நகர்வு?

- எஸ். ஜி. எம்.

இலங்கை 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் பெறும் வரையில் ஈழத்தமிழர் தன்னாட்சிப் பகிர்வு பற்றியோ, தனிநாடு பற்றியோ, கூட்டாட்சி பற்றியோ கோரிக்கைகளை முன் வைக்கவில்லை.

சுதந்திரத்திற்கு முன்பு இனவாத அரசியலில் சிக்கி கொள்வதற்கு முன்பு எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க கண்டிச் சிங்களவருக்கும், கண்டியர் அல்லாத சிங்களவருக்கும், யாழ்ப்பாணத் தமிழருக்கு மென மூன்று தன்னாட்சி சமஷ்டி- அமைப்புகளை உருவாக்கலாம் என்று தெரிவித்த யோசனையைக் கூட தமிழர்கள் பற்றிக் கொள்ளவில்லை.

1948 க்கும் பின் வந்த முதல் சிங்கள இனவாத பெரும்பான்மை அரசின் தமிழர் விரோத நடவடிக்கைகள் தமிழ் இனத்தை தன்னாட்சிக் கோரிக்கையை முன் வைக்கத் தூண்டியது.

இதன் காரணமாகவே தந்தை செல்வா தலைமையில் தமிழரசுக் கட்சி உதயமாகியது. இக்கட்சியின் சமஷ்டி அமைப்புக் கோரிக்கை 1976 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வந்தது. அதன் பின்னரே அக் கட்சி தமிழீழக் கொள்கையை முன்வைத்தது, தொடர்ந்து பதவிக்கு வந்த சிறிலங்கா அரசுகளின் தொடர்ச்சியான தமிழ் இன விரோத கொள்கைகளே தமிழீழக் கோரிக்கைக்கு வித்திட்டன.

சிங்கள இனத்தைப் பொறுத்த வரை சமஷ்டிக் கோரிக்கை தனிநாட்டுக்கு சமனானது என்று கூறியே அதை ஏகமனதாக எதிர்த்தது.

ஆனால் அண்மைக்கால நிகழ்வுகள் இந்த நிலையிலிருந்து மாற்றம் ஏற்படுவதை சுட்டி நிற்கிறது.

சில நாள்களுக்கு முன்பாக சிறிலங்கா அரசின் தகவற்றுறை இராஜாங்க அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்க, "நாட்டில் அமைதியை மீண்டும் ஏற்படுத்தவும் தேசிய ஒற்றுமையை உறுதிப்படுத்தவும் சமஷ்டி அமைப்பு முறை உதவும் என்றால் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று கூறியிருக்கிறார்.

இதே போன்ற கருத்தை இரண்டு மாதங்களுக்கு முன்பாக முஸ்லிம் கலாசார இராஜாங்க அமைச்சர் அஸ்வரும் கூறியிருக்கிறார்.

இவர்கள் இருவருமே யூ. என். பிக்கட்சியினர் மட்டுமல்ல. ஜனாதிபதிக்கு மிகவும் நெருக்கமானவர்களும் கூட!

சிங்களக் கட்சிகளிடையே மாற்றம் ஏற்படுவதையே இது எடுத்துக் காட்டுகிறது.

சாணக அமரதுங்கவின் விபரக்கட்சி சமஷ்டி அமைப்பு மூலமே இனப்பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும் என்ற கொள்கையை முன் வைத்துள்ளது. பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்குச் சமர்ப்பித்த அறிக்கையிலும் அதை வலியுறுத்தியுள்ளது

நவசமசமாஜக் கட்சியின் வாசுதேவ நாணயக்கார பிராந்திய சுயாட்சி எனக்கூறிய போதும், சமஷ்டி அமைப்பு பூரணமானதல்லவெனினும் அப்படி ஒரு அமைப்பு இருந்தால் வடக்கு- கிழக்கு யுத்தம் போன்று நடைபெறாது எனத் தெரிவித்துள்ளார்.

"ராவய" என்னும் சிங்களச் சஞ்சிகை நடத்திய கருத்துக் கணிப்பில் இருபது சதவிகிதமானோர் சமஷ்டி அமைப்புக்கு ஆதரவாக கருத்துத் தெரிவித்துள்ளனர்

கொழும்புப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் உண்மையான அதிகாரம் பரவலாக்கல் அல்லது சமஷ்டி அமைப்பு அடிப்படையில் ஜனநாயக அரசியல் தீர்வு காண வேண்டுமென அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

ஆனால் கச்சேரிமுறை ஒழிப்பு சம்பந்தமாக உரையாற்றிய பொது நிர்வாக மாகாண சபைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா சமஷ்டி சாத்தியமில்லை என நிராகரித்திருந்தார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினரும் "ஹெலஉறுமய" என்னும் சிங்கள பாரம்பரிய அமைப்பின் சித்தாந்த வாதியும், சிரேஷ்ட சட்டத்தரணியுமான எஸ். எல் குணசேகர சமஷ்டி அமைப்பு இனப் பிரச்சினைக்கு தீர்வாக அமையமாட்டாது என எதிர்க்கருத்தை வெளியிட்டுள்ளார்.

அதேபோல ஜனாதிபதி சட்டத்தரணி எஸ். எல். டி சில்வாவும் சமஷ்டி அமைப்புத் தீர்வுக்கு எதிரான கருத்தைத் தெரிவித்துள்ளார்.

இனப் பிரச்சினைத் தீர்வு பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் சிபார்சின்படி அமையும்என ஜனாதிபதியும், ஐ. தே. க. வும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் கூறி வருகின்றனர்.

இத் தெரிவுக்குழுவின் தலைவரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினருமான மங்கள முனசிங்க சமஷ்டியை ஒத்த அமைப்பே இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமையும் என தனிப்பட்ட முறையில் கருத்துத் தெரிவித்ததாகவும் செய்திகள் உள்ளன,

இவற்றிற்கு மேலாக மிகமுக்கியமாக, இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்று கூறிவந்த இந்தியா அதன் நிலையை மாற்றிக்கொண்டது. இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நாகேந்திரநாத் ஜா மூன்று வாரங்களுக்கு முன்பு ஐலண்ட் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டி மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது,

இந்தியத் தூதுவர் சமஷ்டி அமைப்பு பற்றி சிங்கள மக்கள் பயம் கொள்ளத் தேவையில்லையென்றும் அந்த அமைப்புப் பற்றி தீவிரமாக பரிசீலிக்க வேண்டுமெனவும் கூறியுள்ளார். அத்துடன் நிற்காமல் இந்தியாவில் அமுலில் உள்ள சமஷ்டி முறை திருப்தியற்றதாக உள்ளதென மாநிலங்கள் குரலெழுப்புவது பற்றி குறிப்பிட்டுள்ளார்.

மாகாணசபைகள் முறையை மாற்றலாம் என்றும் கூறியுள்ளார்,

சிறிலங்கா ஜனாதிபதியையும் இந்திய பிரதமரையும், இந்திய வெளியுறவுச் செயலர் டிக்சிற்றையும் சந்தித்த பின்பு பாராளுமன்றத் தெரிவுக்குழு முன்பு தோன்றி கருத்துத் தெரிவித்த தமிழர் விடுதலைக்கூட்டணியினரும் சமஷ்டி அமைப்பை இனப்பிரச்சினைக்குத் தீர்வாக முன் வைத்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன,

சமஷ்டி அமைப்பு இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமையுமோ இல்லையோ சமஷ்டி அமைப்பு பற்றிய சிந்தனை சிறிலங்காவில் தீவிரமாகியுள்ளது மட்டும் தெளிவாகிறது

ஒற்றையாட்சி அமைப்பு ஏதோ ஆகாயத்தில் இருந்து இலங்கைக்கு இறைவனால் கொடுக்கப்பட்டது போலவும், மாற்றத்துக்கு உட்படுத்தக் கூடியது அல்ல என்றும் தீவிரமான கருத்தைக் கடைப்பிடித்த தென்னிலங்கையருக்கு அது மாற்றப்பட வேண்டியது தவிர்க்க முடியாததாகி விட்டது என்பதையே சமஷ்டி அமைப்பு பற்றிய பரிசீலனை எடுத்துக் காட்டுகிறது

இனப்பிரச்சினைக்கு சமஷ்டி அமைப்பு மூலம் தீர்வு காண்பதற்கான திசையை நோக்கியும் தெற்கில் நகர்வுகள் இடம் பெறுவதை அவதானிக்கமுடிகிறது.

இதுபற்றிய கருத்தை பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கையில் எதிர்பார்க்கலாம் என்றே தோன்றுகிறது,

## வேளாண்மைப் போட்டியில் பரிசு பெறுவோர் விவரம்

நேற்றைய தொடர்ச்சி

கைதடி;—

நாகமணி சண்முகம் தனம் இளப்பு சாவகச்சேரி, இளைய தம்பி இராசையா கைதடி வடக்கு. கோபாலபிள்ளை துரையப்பா கைதடி தெற்கு.

ஆறுதல் பரிசுகள்:-

கந்தையா மகேந்திரன் நாவற்குழி கைதடி, நாகமுத்து நாகலிங்கம் மறவன் புலவு கிழக்கு சாவகச்சேரி, தில்லைநாதன் தங்கவேலு மறவன்புலவு கிழக்கு சாவகச்சேரி, சேதுகாவலர் கந்தசாமி கோயிலாக்கண்டி கைதடி, கிருஷ்ணன் காந்தினி கைதடி வடக்கு, திருஞானசம்பந்தர் பகீரதன் மறவன்புலவு கிழக்கு சாவகச்சேரி, தம்பு செல்லத்துரை கைதடி வடக்கு கைதடி, தியாகராசா ரவிச்சந்திரன் மறவன்புலவு மேற்கு சாவகச்சேரி, சோமலிங்கம் நடேசு மறவன்புலவு மேற்கு சாவகச்சேரி, சிதம்பரம் சுப்பிரமணியம் கைதடி தெற்கு.

அம்பன்:-

சி,செல்லமுத்து (மந்திகை) துன்னாலை வடக்கு, கனகசபாபதி (வதிரி) இலகடி அத்தாய், சி,செல்வநாயகம் (மந்திகை) புலோலி வடமேற்கு,

ஆறுதல் பரிசுகள்-

பொன் பூரணம்பிள்ளை (வியாபாரிமூலை) பெரிய தெனி வியாபாரி மூலை, கணபதிப்பிள்ளை கந்தசபேசன் வடகிழக்கு அம்மன் குடத்தனை ப அருட்பிரகாசம் (மந்திகை) சவனாய், சபாரத்தினம் கனகநாதன் (வியாபாரி மூலை) கோவில் தோட்டம், அல்வாய் வடக்கு, இ சிவநேசவரி மந்திகை அரசடி ஒழுங்கை புலோலி, க.தணிகாசலம் (மந்திகை) கேசனார் வீதி புலோலி தெற்கு. சு.தங்கராசா (வதிரி) இலகடி அத்தாய், சோ. அன்னலிங்கம் (மந்திகை) பிலத்தம்பை புலோலி வடக்கு, க கந்தசாமி (வதிரி) செம்பாடு ஒழுங்கை துன்னாலை மத்தி. ச. சண்முகநாதன் (மந்திகை) செம்பாடு துன்னாலை.

புலோலி-

சோதிலிங்கம் ஏகாம்பரநாதன் (பொலிகை) ஊறணி வல்வெட்டித்துறை, சண்முகம் தம்பிராசா (பொலிகை) பதிரகாளி கோவிலடி. செ நடராசா (வதிரி) நெல்லியடி.

ஆறுதல் பரிசுகள்-

சிவபுண்ணியம் மயில்வாகனம் (வதிரி) நெல்லியடி வடக்கு அருமைச்சந்திரன் ஜெயராணி (கெருடாவில்) தொண்டமனாறு துறை, சின்னத்துரை சாந்திலிங்கம் (கெருடாவில்) தொண்டமானாறு துறை, இ சிவஞானம் (பொலிகை) வீரபத்திரர் கோவிலடி, நல்லதம்பி நாகலிங்கம் கரணவாய் நொத்தாரிஸ தோட்டம், சிவாம்பிகை ஜெயராசசிங்கம் (வதிரி) கரணவாய் வடக்கு, கந்தவனம் தபாரத்தினம் (கரவெட்டி) அரசடி, இதிஸதோமர்றோமன் அலோசியஸ (கரவெட்டி) கன் பொல்லை, தமயந்தி விக்கினேஸ்வரன் [கரவெட்டி] கன் பொல்லை வீதி, கனகசிங்கம் புவநேந்திரன் (கரவெட்டி) துரையன் தோட்டம்,

நல்லூர்-

சிவசுப்பிரமணியம் அருணகிரிநாதன் கோணாவளை லேன் கொக்குவில் கிழக்கு. இ. நல்லையா பகாலி மத்தி வசாவிளான் (மஞ்சத்தடி இணுவில்) சிஸ்டர் வலேரியன் திருக்குடும்பக் கன்னியர்மடம் பாஷையூர்

ஆறுதல் பரிசுகள்-

நாராயணசாமி விவேகானந்தன் 348 ஆனந்தன் டைவீதி அரியாலை, தர்மலிங்கம் ஜெகதீசன் இளைய தம்பி வீதி அரியாலை, பொன்னம்பலம் லோகநாதன் பொற்பதி வீதி கொக்குவில், சின்னையா செல்வரட்ணம் முள்ளி வீதி அரியாலை, மு. ஜெகதீசன் 144 சந்தோசம் வீதி அரியாலை, வை ரூபாகரன் 62/2 கந்தர் மணியம் வீதி, பொ. சுருட்திரு அமல உட்பாகம் கொழும்புத்துறை, கனகசபை பற்குணநாதன் 164/9 கச்சேரி நல்லூர்வீதி, க உருத்திரகுமார் 150/3 பலாலி றோட் கோண்டாவில். பா, ஜெனனி 250 சந்தோஷம் வீதி அரியாலை,

உரும்பிராய்-

சோமசுந்தரம்எழிலன் உரும்பிராய் கிழக்கு. மாணிக்கம் இரத்தினமலர் திருவெண்ணாமலை நீர்வேலி தெற்கு. செல்லையா உதயகுமார் உரும்பிராய் கிழக்கு,

ஆறுதல் பரிசுகள்-

பண்டாரி வேலுப்பிள்ளை நீர்வேலி தெற்கு, பாலகிருஷ்ணன் வசந்தன் அன்னங்கை உரும்பிராய் மேற்கு, கந்தையா பிள்ளை சிவானந்தி திருவெண்ணாமலை நீர்வேலி தெற்கு, சின்னத்தம்பி வைத்திலிங்கம் நீர்வேலி தெற்கு, செல்லையா பதமநாதன் குளிக்கண்டி ஒழுங்கை கோப்பாய் தெற்கு. தாட்சாயினி மகேந்திரன் ரெம்பிள் வீதி உரும்பிராய் கிழக்கு, கந்தன் முத்தன் ஆனந்தபுரம் கோப்பாய் தெற்கு, சின்னத்தம்பி சேனாதிராசா திருவெண்ணாமலை நீர்வேலி தெற்கு, கந்தையா பதமநாதன் உரும்பிராய் வடக்கு உரும்பிராய், தம்பிமுத்து பரமானந்தம் அன்னங்கை உரும்பிராய் மேற்கு.

கீரிமலை-

ரஞ்சனா கனகரட்டினம் இம்புலாலை அளவெட்டி மேற்கு, குகனேசராசா தவமணி தேவி துன்மனை இளவாலை மத்தி இளவாலை, சீ- கந்தையா கல்லூரிவீதி இளவாலை வடக்கு.

ஆறுதல்பரிசுகள்-

ஆனந்தஜோதி சபாரத்தினம் சீனன் கலட்டி அளவெட்டி, அம்பலம் தம்பிராசா அரசடி அளவெட்டி மேற்கு, கந்தையா சுப்பிரமணியம் அம்பனை தெல்லிப்பளை. விஜயரட்ணம் தாரணி டச்றோட் அளவெட்டி, லோபரி யநாயகம் அலக்கை அளவெட்டி கிழக்கு, தம்பையா பழனிவேலு மனுவல் வளவு அளவெட்டி, பாலசுப்பிரமணியம் சிவரூபன்கொட்கோட்டலை தெல்லிப்பளை, வைரமுத்து சிவாஜினி பெத்தாவளை அளவெட்டி மத்தி, சோமசுந்தரம் மோகனதாஸ நூங்கைப்புலம் அளவெட்டி. கணேசமூர்த்தி பேராதரன் ஆனைக்குட்டி ஒழுங்கை தெல்லிப்பளை

தொல்புரம்-

சு. விக்கினேஸ்வரன் வட்டு தென்மேற்கு, வட்டுக்கோட்டை, ச. இரத்தினசிங்கம் பத்திமா வீதி. பிரான்பற்று, சி சிவசிதம்பரம் சுழிபுரம் மேற்கு, சுழிபுரம்.

ஆறுதல் பரிசுகள்-

சீ பூமாதேவி கலாபவனம், சங்கானை, சி குகதாசன் தேவாலய வீதி, சங்கானை, வி. புருசோத்மன் காளுவன் சந்தி, சுழிபுரம், செ, பாலசுப்பிரமணியம்கார்த்திகைவாசா வட்டுக்கோட்டை, அந்தோனி ஜோட்ஸ அந்தோனியார்வீதி, பண்டத்தரிப்பு, இ. சிவகரன் தங்கோடை வீதி, வட்டுக்கோட்டை, சி பாக்கியலட்சுமி வடலியடைப்பு, பண்டத்தரிப்பு. ஆ நகுலேஸ்வரி மூளாய் தெற்கு. சுழிபுரம், பொ. நாகலிங்கம் பண்ணாகம், ம முகிலன் டச்சுறோட், சித்தங்கேணி.

உடுவில்-

த. குமாரசாமி அம்பன் வீதி, உடுவில் வடக்கு, இராசையா தம்பிரத்தினம் சுன்னாகம்தெற்கு, இ,வசந்தரூ ன்

— 04ஆம் பக்கம் பார்க்க

## ★ இளைஞர் கொலையின் எதிரொலியாக மோதல்
# பீகாரில் பொலிஸாருக்குக் கல்வீச்சு கடைகள், வீடுகள் தீக்கிரை

பீகார் மாநிலத்தில் இளைஞர் ஒருவர் போட்டி அரசியற் குழு ஒன்றினால் கொலைப் பட்டதையடுத்து அங்கு குறிப்பிட்ட பகுதியில் பதற்றம் நிலவுவதாக நேற்றுப் பிற்பகல் தெரிவிக்கப்பட்டது,

இச் சம்பவத்தையடுத்து ஆத்திரமுற்ற கும்பலொன்று கடைகளுக்கும், வீடுகளுக்கும் தீ வைத்து விட்டதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் கூறின.

பொலிஸார் குறுக்கிட்ட போது அவர்கள் கற்களால் தாக்கப்பட்டதாகவும் பொலிஸ் வாகனம் ஒன்று தீ வைத்து நாசமாக்கப்பட்டதாகவும் எட்டுப் பொலிஸார் காயமுற்றதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொலிஸார் நிலைமையைச் சமாளிக்கத் தடியடிப் பிரயோகம் செய்ததுடன் கண்ணீர்ப் புகைப் பிரயோகமும் மேற்கொண்டனர்.

இச் சம்பவம் தொடர்பாக 30 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

# துருக்கி நிலநடுக்கம்; மீட்புப்பணியில் அமெ. ராணுவமும் சேர்ந்தது

துருக்கியின் கிழக்குப் பகுதியில் கடும் நிலநடுக்கம் ஏற்பட்ட "எக்கியான்" நகரில் தொடர்ந்து பெருமளவில் உதவிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

துருக்கி இராணுவம் செம்பிறைச் சங்கப் பிரிவுகள் மற்றும் சிவில் தொண்டுப்பணியாளர்களும் ஹெலிகொப்டர்களின் உதவியுடன் அமெரிக்க இராணுவ நிபுணர்களால் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்,

பிற நாடுகள் உதவிப் பொருள்களையும், அதிகாரிகளையும் அனுப்பி வருகின்றன.

600 பேர் வரை இறந்திருக்கலாம் என்றும் நூற்றுக் கணக்கானோர் காணாமல் போயிருக்கலாம், இரண்டாயிரம் பேர் காயமுற்றனர் என்றும் நேற்று ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன,

நூற்றுக் கணக்கான கட்டிடங்கள் அழிந்துவிட்டன, அல்லது மிக மோசமாகச் சேதமாகிவிட்டன என்றும் தெரிவிக்கப்படுகின்றது,

நிலநடுக்கத்தின் பின்னரும் சில அதிர்வுகள் ஏற்பட்டதை உணர முடிந்ததாகவும் இறந்தவர்களது எண்ணிக்கை ஆயிரத்தைத் தாண்டக்கூடும் எனக் கருதப்படுவதாகவும் பிந்திக் கிடைத்த செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

★ பெரும் பண மோசடி தொடர்பாக

# எர்ஷாத் இரு மந்திரிகள் மற்றும் அதிகாரி மீது குற்றச்சாட்டு

பங்களாதேஷின் முன்னாள் ஜனாதிபதி எர்ஷாத்தும் மற்றும் மூன்று பேரும் விமானக் கொள்வனவு பேரம் ஒன்றில் மோசடி செய்தனர் அதற்கு உதவினர் என்ற குற்றச்சாட்டின் பேரில் விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்,

எர்ஷாத்தும், முன்னாள் அமைச்சர்கள் இருவரும், அதிகாரி ஒருவரும் 1990 ஆம் ஆண்டில் இந்த விமானங்களை கொள்வனவு செய்ததன் மூலம் 54 இலட்சத்து 50 டொலர்கள் வரை தமக்கு அல்லது வேறு நபர்களுக்குப் பண ரீதியில் நேர்மையற்ற விதத்தில் அனுகூலங்களையும் பெற்றுக் கொள்வதற்கு அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்தனர் என்று பங்களாதேஷின் அட்டோர்னி ஜெனரல் தெரிவித்துள்ளார்.

விசேட நீதிபதி முன்னிலையில் இவர்கள் விசாரணை செய்யப்படுகின்றனர்

# அவுஸ்திரேலியாவில் சூறாவளி அபாயம்; மக்கள் விழிப்பு

அவுஸ்திரேலியாவின் மத்தியபகுதியில் வாழும் மக்கள் சூறாவளி தாக்கக் கூடும் என்ற அச்சத்தினால் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளத் தயாராகிவருகின்றனர் என்று அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

சூறாவளியுடன் பெரும் மழையும் பெய்யும் என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளது,

குறிப்பிட்ட பகுதியில் கரும்புச் செய்கையை மழையும், காற்றும் பாதித்துள்ளதாகவும் கடல் கொந்தளிப்பாக உள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

# ஈராக் வடக்குப் பகுதியில் குண்டுவீச்சுடன் கடும் போர்

ஈராக்கின் வடபகுதியில் 'குர்தி' இனத்தவர்களுக்கும், ஈராக்கியப் படையினருக்கும் இடையில் கடும் போர் நிகழ்ந்து வருவதாக அறிவிக்கப்படுகிறது.

ஈராக்கியப் படையினர் நடத்திய நகர் மீதான குண்டுவீச்சுத் தாக்குதல் ஒன்றில் அறுவர் கொல்லப்பட்டனர்.

'குர்தி' கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் பெரும் தாக்குதல் ஒன்றினைத் தொடுக்க ஈராக் படைகளைக் குவித்து வருவதாக குர்தித் தலைவர்கள் எச்சரித்துவந்ததையடுத்து போர் புதுவேகம் பெற்றுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# குரோஷியாவில் மீண்டும் கடும் சண்டை ஆரம்பம்!

யுத்தத்தினால் சீர்குலைந்து போயிருக்கும் குரோஷியாவில் மீண்டும் சண்டைகள் ஆரம்பமாக உள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

பீரங்கித் தாக்குதல்கள் றொக்கட் தாக்குதல்களால் எண்மர் மடிந்தனர். இருபத்திரண்டு பேர் காயமுற்றனர்.

யுத்தத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கிடையில் சமாதானம் ஏற்படுத்தப்பட ஐ.நா. சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட யுத்த நிறுத்தம் ஜனவரி 3 ஆம் திகதி அமுலுக்கு வந்ததிலிருந்து நேற்று முன்தினம் நிகழ்ந்த யுத்தத்தில் தான் இவ்வளவு கடும் விபரீதம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதே சமயம் புதிதாக சுதந்திரம் பெற்ற குரோஷியாவில் மே மாதமளவில் 14 ஆயிரம்பேரைக் கொண்ட அமைதி காக்கும் படை நிலை கொள்ளவுள்ளது,

இதற்கு முன்னோடியாக 450 பேரைக் கொண்ட ஐ.நா. சபை அதிகாரிகள் குழு ஒன்று இவ்வாரம் அங்கு சென்றுள்ளது.

# சமய பாட ஆசிரியர்களை பயிற்றுவிக்க நடவடிக்கை

சமயபாடத்தினைப் போதிப்பதில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களையும், சமயக் கல்வி தொடர்பான ஆசிரிய ஆலோசகர்களையும் பயிற்றுவிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் படவுள்ளன.

இதனால் தற்போது கோட்டங்களுக்குத் தெரிவுசெய்யப்பட்டு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சமயக்கல்வி தொடர்பான ஆசிரிய ஆலோசகர்களின் விவரங்களை உடனடியாக அனுப்பிவைக்குமாறு கல்வி உயர் கல்வி அமைச்சின் சமயக்கல்விப் பணிப்பாளர் கோட்டக் கல்விப் பணிப்பாளர்களைப் பணித்துள்ளார். (15)

## டிப்ளோமா கற்கைநெறி

திறந்த பல்கலைக்கழக பட்டமேற் கல்வி டிப்ளோமா கற்கை நெறியின் பகுதி ii இல் இவ்வருடம் பதிவு செய்த மாணவர்களுக்குரிய பகல்நேர வகுப்பு எதிர்வரும் வெள்ளிக்கிழமைகளில் 9 மணி முதல் பிற்பகல் 4 00 மணி வரை நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 44

வேளாண்மை—

ரூபன் பிள்ளையார் வீதி, இணுவில் கிழக்கு,

ஆறுதல் பரிசுகள்-

த. எட்வின் றோஸ்மேரி மானிப்பாய் கிழக்கு, ஆறுமுகம் பூலோகநாதன் ஆறுமுகம் வீதி, கந்தரோடை, கந்தவனம் பாலகிருஷ்ணன் ஏழாலை கிழக்கு, த ஜெகநாதன் மாணிக்கன் ஒழுங்கை இணுவில் கிழக்கு. தே. கணேஸ் கனகசபை வீதி, மானிப்பாய் தெற்கு. வைரவநாதன் சின்னத்தம்பி சுன்னாகம் மேற்கு. இ இராசலிங்கம் சேவன்காமம் வீதி. மானிப்பாய் மேற்கு சின்னத்தம்பி கோபால கீரிமலை றோட், சண்டிலிப்பாய், அப்பாக்குட்டி செல்வராசாகச்சாவடி, சுன்னாகம் தெற்கு. மூ கணேசமூர்த்தி தியேட்டர் ஒழுங்கை இணுவில் வட இழக்கு.

விழியால் 'எக்ஸ்-ரே' எடுக்கும் சீனப் பெண்

ஜென் சைம் சுயி 'என்னும் சீனப் பெண் டாக்டருக்கு எக்ஸ்-ரே கண்' எதிரே ஒரு மனிதனைப் பார்க்கும் போது அவனது உடலின் எலும்புக் கூடு இதயம் நுரையீரல்கள் முதலியவை எக்ஸ்-ரே எடுத்துப் பார்ப்பது போல் இவரது சாதாரணக் கண்களுக்குத் தெரிகிறதாம் ஆனால் 5 அல்லது 6 வயது முதலே இந்த எக்ஸ-ரே சக்தி பெற்ற இவருக்கு இப்போது 29 வயது இந்த விசித்திரச் சக்தியைப் பயன்படுத்தி நோயாளியின் உடல் நிலையை எக்ஸ-ரே கருவி இல்லாமலேயே கவனித்து விடுகிறார் இவர்.

# 'சாட்சியமளிக்க சூழ்நிலை சரியாக அமையவில்லை'

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக் குழு முன்னிலையில் சாட்சியமளிக்கச் சூழ்நிலை சரியாக அமையவில்லை எனப் பேட்டி ஒன்றில் யாழ் போதனாவைத்தியசாலை டாக்டர் எஸ். சிவகுமாரன் கூறியதாக நேற்றுக் கொழும்பு நாளிதழ் ஒன்று தனது செய்தியில் தெரிவித்தது

தான் தெரிவுக் குழுத் தலைவர் மங்கள முனசிங்காவைக் கடந்த வியாழக்கிழமை சந்தித்ததாக அவர் கூறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நான்கு பேர் கொண்ட குழுவுடன் கொழும்பு வந்துள்ள டாக்டர் சிவகுமாரன் வடக்கிலும், கிழக்கிலும் தேர்தல்கள் நடத்தப்பட்ட பின்னர் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிட இணங்குவதாகத் தெரிவித்ததாகவும் மேற்படி பேட்டியில் கூறியதாகவும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஒருங்கிணைந்து செயல் வடிவம்

வடக்கில் உள்ள பாதிக்கப்பட்ட மக்களை நெறிபடுத்துவதற்கும் இப் பகுதியின் பொருளாதார அபிவிருத்தியைதிட்டமிடுவதற்கும் எந்த பொதுவான வேலைத் திட்டத்தை மேற்கொள்வதற்கும் வசதியாக வடமாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய இடங்களிலுள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்கக்கிளைகளாயும் ஒன்று சேர்ந்து ஒன்றியமாக இணைந்து இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ் கிளையினால் வெளியிடப்பட்டுள்ள செய்திமடலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (15)

# கரபந்தாட்ட பயிற்சி முகாம் இன்று ஆரம்பம்

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட மாணவர்களுக்கான (சகல பாடசாலைகளதும்) கரபந்து பயிற்சிமுகாம் இன்று திங்கட்கிழமை தொடக்கம் ஆரம்பமாகின்றது.

இம் முகாமின் அங்குரார்ப்பண வைபவம் பிற்பகல் 3-00 மணிக்கு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் உடற்கல்வித்துறை உதவிப் பணிப்பாளர் திரு சே நாகமணி தலைமையில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு சி. வே. மகேசவேலுவின் ஆசியுரையுடன் ஆரம்பமாகவுள்ளது.

பண்டத்தரிப்புக் கோட்டக் கல்வி நிலைய உடற்கல்வி இணைப்பாளர் திரு. வ. முருகேசு இப் பயிற்சிநெறியை நெறிப்படுத்துகின்றார்.

இதனைத் தொடர்ந்து வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியிலும். தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலும் அவ்வப்பகுதி வலய மாணவர்களின் பயிற்சிப் பாசறை தொடர்ந்து நடைபெறும்.

பயிற்சியில் கலந்துகொள்ளும் சகல மாணவர்களும் தவறாது கலந்துகொள்ளக் கூடியதாக பாடசாலை அதிபர்கள் மாணவர்களை அனுப்பி வைக்கவேண்டும் எனப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு வே. மகேசவேலு கோரியுள்ளார். 20

## சமுகந்தரக் கோரிக்கை

திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ் பிரதேச நிலையத்துக்கு முகாமைத்துவ டிப்ளோமா ஒப்படைகள் திருத்தப்பட்டு இங்கு கிடைத்துள்ளன.

அதைப் பெற்றுக்கொள்ளும்படியும் தமது பதிவுப்புத்தகத்துடன் சமுகம் கொடுக்குமாறு கோரப்படுகின்றனர். 44

# இரத்மலானை இந்துக்கல்லூரி மீண்டும் திறக்கப் பணிப்பு

தற்போது இராணுவ அதிகாரிகளின் உபயோகத்தில் இருக்கும் இரத்மலானை இந்துக்கல்லூரியை மீண்டும் மாணவர்களுக்கென திறக்குமாறு ஜனாதிபதி பிரேமதாஸ நேற்று பணித்துள்ளார்

நேற்று இக்கல்லூரிக்கு சென்ற ஜனாதிபதி அங்கு வைத்து இப்பணிப்பை விடுத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

சுமார் இரண்டாயிரம் தமிழ் மாணவர்கள் பயின்ற இக்கல்லூரி 1983இல் மூடப்பட்டு பின் இராணுவ பாவனைக்கு வழங்கப்பட்டமை தெரிந்ததே.

# தீவுப்பகுதி நோயாளிகளுடன் கோமாரி கப்பல் வந்துசேர்ந்தது

நேற்றுக்காலை கோமாரி என்ற கப்பல் பருத்தித்துறை துறைமுகம் வந்து சேர்ந்தது. இதில் பல்கலைக்கழகம், வைத்தியசாலை என்பவற்றுக்கு எரிபொருளும் 42 தபால் பொதிகளும் வந்துள்ளன.

முன்னதாக இக்கப்பல் தீவுப்பகுதி சென்று அங்கிருந்து கர்ப்பவதிகள், நோயாளிகள் எனப் 16 பேரை ஏற்றிக் கொண்டு பருத்தித்துறை வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நேற்றுப் பிற்பகல் லிஸ்லி கப்பல் புறப்பட்டுச் சென்றது. (08)

இலங்கை திரும்பிய அகதிகள் பற்றி

# இந்தியத் தூதுவர் ஜனாதிபதி பிரேமதாஸவுடன் சந்திப்பு

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் என். என் ஜா அண்மையில் இலங்கை திரும்பிய 7500 அகதிகள் குறித்தும், ஏனைய விவகாரங்கள் குறித்தும் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவுடன் கலந்துரையாடியதாகக் கொழும்புச் செய்திகள் நேற்றுத் தெரிவித்தன

இச் சந்திப்புப் பற்றிய தகவலை ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் வெளியிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தூதுவர் ஜா கடந்தவாரம் வெளிநாட்டமைச்சிடம் விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரன் பற்றிய மேலதிகத் தகவல் கோரிக் கடிதம் ஒன்றினைக் கையளித்ததாகவும் மேற்படிச் செய்திகள் கூறின.

## 'ராய்ட்டருக்கு' திருமலை பிரிகேடியர் அளித்த பேட்டி

இவ் வருட முடிவுக்குள் திருகோணமலையை விட்டு விடுதலை புலிகள் முற்றாக அகற்றப்பட்டு விடுவரென்று திருகோணமலைக்குப் பொறுப்பான சிரேஷ்ட இராணுவ அதிகாரி பிரிகேடியர் சிறில் பீரிஸ 'ராய்ட்டர்' நிருபருக்கு அளித்த பேட்டி ஒன்றில் கூறியுள்ளாராம்.

இத் தகவலை நேற்று 'சண்டே ஒப்சேவர்' வெளியிட்டது.

2498 சதுரக் கிலோ மீற்றர் பரப்பளவுள்ள திருகோணமலை மாவட்டத்தில் 300 கிளர்ச்சிவாதிகள் இருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டதாகவும் இச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது

## அதிவேக ரயில்

ஜப்பானில் டோக்கியோவிலிருந்து ஒஸாக்கா என்ற இடத்திற்கு புதிய அதிவேக ரயில் ஒன்று சேவையிலீடுபடுத்தப்பட்டுள்ளது.

2½ மணித்தியாலத்தில் 550 மைல் தொலைவிலுள்ள இப் பாதையில் மணிக்கு 270 கிலோ மீற்றர் வேகத்தில் இந்த ரயில் செல்லும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## இளவாலை ஹென்றியரசர் கல்லூரி பெற்ற வெற்றிகள்

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் இளைச்சங்கம் ஒழுங்கு செய்து சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியில் கடந்த 29ஆம் திகதி நடத்திய 'சிம்' வழாவில் புனித ஹென்றியரசர் கல்லூரியைச் சார்ந்த குருளைச் சாரணர்கள் சகல போட்டிகளிலும் பங்குபற்றி 1ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டனர் இவர்களது அணிநடை பலரது பாராட்டையும் பெற்றது.

பண்டத்தரிப்புக் கோட்டக் கல்வி அலுவலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கிடையேயான கோட்ட மட்ட உடற்பயிற்சிப் போட்டியிலும் 13 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான பிரிவில் புனித ஹென்றியரசர் கல்லூரி மாணவர்கள் 1ஆம் இடத்தைப் பெற்றனர்.

பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி அலுவலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட 15 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி யாழ் அருணோதயக் கல்லூரியில் 12-03-1992 இல் நடைபெற்றது. புனிதஹென்றியரசர் கல்லூரிக் கோஷ்டி எதிர்த்தாடிய மகாஜனாக் கல்லூரி அணியை 1—0 என்ற கோலாக வென்றது.

## 'அனாவசிய பயம்'

"ஜெயலலிதா என்னைக் கண்டு அனாவசியமாகப் பயப்படுகிறார்" என்று முன்னாள் அமைச்சரும், தற்போதைய சட்டசபை உறுப்பினருமான எஸ் திருநாவுக்கரசு பேட்டி ஒன்றில் கூறியுள்ளார்.

## ஊனமுற்றோர் நலன் கருதி...

ஊனமுற்றுள்ளவர்கள் விரும்பிச் செய்யும் தொழிலில் பயிற்சி வழங்குவதற்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்கிளை துரித நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

கிராமசேவகர் பிரிவுகளிலுள்ளவர்கள் இதில் சேர்வதற்கு தமது விண்ணப்பங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளை கோரியுள்ளது. (15)

## ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேர்

சங்கரத்தை பிட்டியம்பதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் உற்சவம் கடந்த 9ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி வெகு சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

நாளை மறுதினம் 18ஆம் திகதி புதன்கிழமை தேர்த் திருவிழாவும், 19ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது 18

## தென்னிலங்கையில் கடும் வறட்சி நிலவுகிறது

கடுமையான வறட்சி தென் இலங்கையில் நிலவுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன

இந்த வறட்சி தொடருமானால் கொழும்பில் மின் வெட்டை நடைமுறைப்படுத்துவதைத் தவிர வேறு வழியில்லையென மின்சக்தித் துறை அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

மின்சார உற்பத்திக்கு உதவும் நீர்த் தேக்கங்களின் மட்டம் வெகுவாகக் குறைந்திருப்பதாகவும் இதனால் எதிர்வரும் ஏப்ரல் மாதமளவில் மின் வெட்டைக் கொண்டு வர நேரிடலாம் அதனால் மின் பாவனையாளர்கள் மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துமாறு கோரப்பட்டுள்ளனர். (16)

## வைத்தீஸ்வராவுக்கு முதலிடம்

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெற்ற யாழ் மாவட்டப் பாடசாலைகள் கலந்துகொண்ட உடற்பயிற்சிப் போட்டியில் 19 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் வைத்தீஸ்வராக் கல்லூரி மாணவர்கள் முதலிடம் பெற்றுள்ளனர்.

வண்ணை செற்குக் கோதண்டப் போட்டியிலும் யாழ் கோட்ட மட்டப் போட்டியிலும் இவர்களே முதலிடத்தைப் பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது எரிந்து கொண்டிருக்கும் இரும்பு வளையத்திற்குள் நுட்பமாகப் பாய்ந்தமை அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது மாணவர்களின் சாதனையைப் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் பழைய மாணவர் சங்கமும் பாராட்டியுள்ளன

எதிர்க்கட்சி எம்.பிக்கள்

## அபிவிருத்தித் திட்டங்களுக்கு பூரண ஆதரவளிக்க உறுதி

ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவுக்கு எதிர்க்கட்சி எம்.பிக்கள் நேற்று முன்தினம் பாராட்டுத் தெரிவித்ததாகக் கொழும்பு நாளிதழ் ஒன்று நேற்று தெரிவித்தது.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி சம்பந்தமாக கடந்த வாரம் ஜனாதிபதியுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் முடிவு குறித்தே அவர்கள் திருப்தியும் பாராட்டும் தெரிவித்தனராம்.

நாட்டின் நலன் கருதி மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்கும் பூரண ஆதரவளிப்போம் என்றும் அவர்கள் கூறினராம்.

## நடேஸ்வரா மாணவர் கவனத்துக்கு

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் கல்விகற்று தற்போது வேறு பாடசாலைகளில் பயில்கின்ற 90, 91, 92, 93, 94 ஆம் ஆண்டுகளுக்கான சகல க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களையும் இன்று திங்கட்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் தவறாது ஒன்று கூடுமாறு நடேஸ்வராக் கல்லூரி அதிபர் கோரியுள்ளார்'

## பருத்தித்துறையில் இரண்டு கடைகளில் திருட்டு

பருத்தித்துறை நகரில் உள்ள இரு கடைகள் இரவு நேரத்தில் கூரை பிரிக்கப்பட்டு சுமார் 20,000 ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளையிடப்பட்டுள்ளதாக தமிழீழ காவல்துறை வடமராட்சி அலுவலகத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது.

காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (11)

## நியூஸிலாந்து முன்னணியில்

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் முடிவுற்ற ஆட்டத்துடன் 59 போட்டிகள் நிறைவு பெற்றுள்ளன. இதில் கலந்துகொண்ட ஆட்டங்கள் ஆறிலும் வெற்றியீட்டிய நியூஸிலாந்து அணி 12 புள்ளிகளைப் பெற்று முன்னணியில் நிற்கிறது: அதற்கடுத்து 11 புள்ளிகளைப் பெற்ற இங்கிலாந்து அணி நிற்கிறது.

மற்றைய 7 அணிகளும் பெற்ற புள்ளிகள் விவரம்:- தென் ஆபிரிக்கா-8, மேற்கிந்தியா 8, அவுஸ்திரேலியா-6, பாகிஸ்தான், ஸ்ரீலங்கா, இந்தியா தலா 5 புள்ளிகள். ஸிம்பாப்வே இன்னும் புள்ளிகள் எதையும் பெறவில்லை.

21ஆம் திகதி நடைபெறவுள்ள அரை இறுதி ஆட்டத்திற்கு முன் 15ஆம் திகதி இந்தியா எதிர் தென்ஆபிரிக்கா, பாகிஸ்தான் எதிர் ஸ்ரீலங்கா, நியூஸிலாந்து எதிர் இங்கிலாந்தும், 18ஆம் திகதி அவுஸ்திரேலியா எதிர் மேற்கு இந்தியா, இங்கிலாந்து எதிர் ஸிம்பாப்வே, நியூஸிலாந்து எதிர் பாகிஸ்தான் ஆகிய போட்டிகள் இடம்பெறவுள்ளன (16)

## ஜேர்மன் பயணிகள் இருவர் மாத்தறைக் கடலில் பலி

தெற்கில் மாத்தறைப் பகுதியில் கடலில் குளிக்கச் சென்ற இரு ஜேர்மன் உல்லாசப் பயணிகள் கடலுக்குப் பலியானார்கள்

இவர்களது சடலங்கள் சில தினங்களின் பின் கடலிலிருந்து மீட்கப்பட்டன.

# செய்தி உலகம்

## இங்கிலாந்து

இன்னும் இரண்டு அல்லது மூன்று வருடங்களில் நாய், பூனை, குரங்கு போன்ற வளர்ப்புப் பிராணிகளுக்கு மூளையில் எலக்ட்ரோட்ஸ் செலுத்தி அவை மனிதர்களுக்கு குற்றேவல்களைக் குறைவின்றிச் செய்து முடிக்கும் படி செய்ய முடியும். இதனால் நோயாளிகள், ஊனமுற்றோர், வயோதிபர் ஆகியோருக்கு அவை பேருதவியாய் இருக்கும் என்று இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள இங்கிலாந்து விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்,

அதே வேளை ஸ்கொட்லண்ட் காவற்துறை நிபுணர்கள், சில கொடியவர்கள் எலக்ட்ரோட்ஸ் முறை பிரபல்யம் அடைந்ததும் அவ்விதம் பிராணிகளை எலக்ட்ரோட்ஸ் செய்து தமது சமூக விரோதச் செயல்களுக்கு உடந்தையாக்கலாம் என்று பெரிதும் அஞ்சுவதாகத் தெரிவித்துள்ளார்கள்.

## நியூயோர்க்

1895 ஆம் ஆண்டு நியூயோர்க்கில் நிர்மாணிக்கப்பட்ட பொதுநூலகம் உலகிலேயே பெரிய நூலகங்களில் ஒன்றாக கருதப்படுகிறது. இந்த நூலகத்தில் 140 கி.மீ நீளத்திற்குப் புத்தகங்கள், உலகப்படங்கள், கையெழுத்துப் பிரதிகள் என அனைத்தும் சேர்த்து வைக்கப்பட்டுள்ளன

81 பகுதிகளை உள்ளடக்கிய இந் நூலகத்திற்குப் புத்தகங்கள் மேலும் மேலும் வந்து குவிவதினால் அவற்றை வைப்பதற்காகப் புதிய கட்டிடம் ஒன்றைக் கட்ட ஆரம்பித்துள்ளார்கள். இப் புதிய கட்டிடத்தின் நீளம் 132 கி.மீ என்றும். 63 கோடி ரூபா செலவில் கட்டப்பட்டுவரும் இக் கட்டிடம் இம் மாத இறுதிக்குள் கட்டி முடிக்கப்பட்டுவிடும் என்றும் தெரியவருகிறது.

## இத்தாலி

இத்தாலியில் கார்களை உற்பத்தி செய்யும் 'பெராரி' என்ற நிறுவனம் 'எவ் 40' என்ற பெயரில் ஸ்போட்ஸ் கார் ஒன்றை உற்பத்தி செய்துள்ளது. பின்பக்கத்தில் இஞ்சின் பொருத்தப்பட்டுள்ள இக் காரின் முன்பக்கம் எது. பின் பக்கம் எது என்று தெரியாததில் இரு பக்கங்களும் ஒரே விதத்தில் உருவமைக்கப்பட்டுள்ளது. மேலும் மணிக்கு 324 கி.மீ. வேகத்தில் போகக் கூடிய இக்கார் மோட்டார் கார் பந்தயங்களில் கலந்து கொள்வதற்காக மட்டும் தயாரிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது

## அமெரிக்கா

அண்மைக் காலத்தில் சூரியனில் அதிகமாக காந்தப்புயல் உருவாகி வருவதாக அமெரிக்காவின் வளிமண்டல ஆராய்ச்சி நிறுவனம் கண்டுபிடித்துள்ளது.

தொலைக்காட்சி, வானொலி தொடர்புச் சாதனங்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனவாம் கடந்த ஜூன் மாதத்தில் ஒரு வாரம் காந்தப்புயல் அதிகரித்ததினால் உலகம் முழுவதும் இந்த ஒலி அலைகள் பாதிக்கப்பட்டன என்றும் அந் நாட்களில் பூமியின் வெப்பநிலையும் மாறிக் காணப்பட்டதாகவும் கூறப்படுகிறது மேலும் கடந்த 10 ஆண்டுகளாக காந்த புயல் சூரியனில் அடிக்கடி ஏற்படுவதினால் சூரியன் அதன் நிலையில் இருந்து சிறிது அளவு பூமியை நோக்கி நகர்ந்துள்ளதாகவும். இந்த நகர்வால் பூமிக்கு எந்த வித தாக்கமும் ஏற்படாது என்றும் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்,

## ஜப்பான்

உலகிலேயே அதிகமாக இரத்தம் இறக்குமதி செய்து கொள்ளும் நாடாக ஜப்பான் கருதப்படுகின்றது, இதனால் அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், கனடா ஆகிய நாடுகளைத் தவிர மற்ற ஏனைய நாடுகளில் இரத்தத்தின் விலை அதிகரித்து விட்டது

ஜப்பானில் இரத்த தானம் செய்ய அதிகமானவர்கள் இருந்த பொழுதிலும் பிற நாடுகளில் இருந்தே விசேடமாக வளர்முக நாடுகளில் இருந்தே தனது நாட்டிற்குத் தேவையான இரத்தத்தை இறக்குமதி செய்து வருவதாகவும் அதற்கான உண்மைக் காரணத்தை வெளியிட ஜப்பான் விரும்பவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (16)

# நியூஸிலாந்து, தெ. ஆபி, பாக் அணி நேற்றைய போட்டிகளில் வெற்றி

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் நேற்று நியூஸிலாந்தில் இடம் பெற்ற போட்டியில் நியூசிலாந்து அணி இங்கிலாந்து அணியைத் தோற்கடித்தது.

அவுஸ்திரேலியாவில் இடம் பெற்ற போட்டிகளில் தென் ஆபிரிக்க அணி இந்திய அணியையும். பாகிஸ்தான் அணி இலங்கை அணியையும் தோற்கடித்தன.

ஸ்கோர் விவரம் - இங்கிலாந்து அணி 50 ஓவர்களில் 8 விக்கற்றுகள் இழப்பிற்கு 200 ஓட்டங்கள் நியூசிலாந்து அணி 45, 4 ஓவர்களில் 3 விக்கற்றுக்கள் இழப்பிற்கு 201 ஓட்டங்கள்,

இந்தியா 30 ஓவர்களில் 6 விக்கற்றுகள் இழப்பிற்கு 180 ஓட்டங்கள். தென் ஆபிரிக்கா 29, 1 ஓவர்களில் 4 விக்கற்றுகள் இழப்பிற்கு 182 ஓட்டங்கள்.

இலங்கை அணி 50 ஓவர்களில் 6 விக்கற்றுகள் இழப்பிற்கு 212 ஓட்டங்கள் பாகிஸ்தான் அணி 49 2 ஓவர்களில் 213 ஓட்டங்கள். 16

# விடுதலையான 39 நபர்கள் மீண்டும் கைதாகி தடுத்துவைப்பு

நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட முப்பத்தொன்பது ஜே. வி. பி சந்தேக நபர்கள் மீண்டும் கைது செய்யப்பட்டு அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் இந்த சிறைச்சாலைக்கு விஜயம் செய்த சிறைச்சாலைகளுக்குப் பொறுப்பான அமைச்சர் திரோன் பெர்னான்டோவிடம் இவர்கள் தமது நிலைமையைக் கூறினர்.

இது தொடர்பாக தான் நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் கூறினார்.

### சந்திரசேகரன் விடுதலை தொடர்பாக

# அடிப்படை மனித உரிமை வழக்கு இன்று உயர் நீதிமன்றத்தில்

மலையக முன்னணித் தலைவர் பி. சந்திரசேகரன், உப தலைவர் தர்மலிங்கம், செயலாளர் அப்துல்காதர் ஆகியோரின் விடுதலை தொடர்பான அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கு இன்று 16 ஆம் திகதி திங்கட்கிழமை கொழும்பு உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது

கொழும்பு குண்டு வெடிப்பு சூத்திரதாரி எனச் சந்தேகிக்கப்படும் வரதனுக்கு புகலிடம் அளித்ததாக இவர்கள் கைதாகி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தொடர்பான ஆட்கொணர்வு மனு மீதான விசாரணை மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் சரத் என் சில்வா முன்பு நடைபெற்று உயர் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தப்பட்டுள்ளது தெரிந்ததே 06

# அ. தி. மு. க ஆட்சியின் ஆயுள் ஓராண்டே - நாஞ்சில் மனோகரன்

தி. மு. க தேர்தலில் அடிபட்டது சாகவில்லை அடிபட்ட பாம்புகாற்றைக்குடித்து உயிர் பெற்றுஉங்களைகாலைக்கடித்து விடும்

இவ்வாறுமுன்னாள் தி மு க அமைச்சர் நாஞ்சில் மனோகரன் சென்னையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார்

ராஜீவ்காந்தி கொலை அனுதாபத்தால் வந்த அ தி மு க ஆட்சியின் ஆயுள் ஓராண்டே

அ தி மு க வுக்கு எதிராகப் பேசினால் 'தடா' சட்டத்தை ஏவுகிறார்கள் என அவர்மேலும் சொன்னார் 06

★ உள்ளூர் உற்பத்தியாளரைப் பேண

# தெற்கிலிருந்துவரும்சிலபொருள்கள் வரிவிதிப்புச் செய்யப்படும்

தமிழீழம் மீது சடுமையான பொருளாதாரத் தடையை ஸ்ரீலங்கா அரசு திணித்த போதிலும் கடும் உழைப்பாளிகளான எமது மக்கள் சுய உற்பத்தியை அதிகரித்தனர். இதனால் இப்போது விழித்துக்கொண்ட ஸ்ரீலங்கா அரசு இன்று தமிழீழத்தினுள் தனது உற்பத்திப் பொருள்களை அனுப்பி சிறுகச்சிறுக வளர்ந்த எமது உள்ளூர் உற்பத்தியை நசுக்கத் துடிக்கிறது.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவு நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வகையில் ஸ்ரீலங்காவிலிருந்து தற்போது கொண்டு வரப்படும் தம்புத்தடி, விளக்குமாறு, இனிப்பு, மென்பானங்கள், கோடியல், ஜாம் வகைகளுக்கு வரிவிதிப்பு செய்யப்படவுள்ளதாகவும், அறிவிக்கப்படாமல் ஸ்ரீலங்காவில் இருந்து உள்வரும் மேற்படி பொருள்கள் பறிமுதல் செய்யப்படும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்காவின் உற்பத்திப் பொருள்களில் மூன்றில் ஒரு பங்கு வட தமிழீழத்திலேயே சந்தைப் படுத்தப்பட்டு வந்தது இப்போது அப்பங்கு தேங்கியுள்ளதால் இலாபம், வரிப்பணம் என்பவற்றிலும் மூன்றில் ஒரு பகுதியை தற்போது அரசு இழந்துள்ளதாகவும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### பின்வாங்கிய படையினர் 4 தமிழரைக் கொன்றார்கள்

# பலமுனையில் வெளியேறிய படையினரை புலிகள் இருமுனையில் எதிர்கொண்டனர்

மட்டக்களப்பில் பல முகாம்களிலிருந்தும் நேற்றுப் புறப்பட்ட இராணுவத்தினர் மீது புலிகள் உக்கிரத்தாக்குதலை மேற்கொண்டனர்.

நேற்றுக்காலை 7மணியளவில் கஞவாஞ்சிக் குடி, பெரியபோரதீவு, வெல்லவெளி, பாலையடி வெட்டை இராணுவமுகாம்களிலிருந்து சுமார் 600 படையினர் கிராமங்களில் தேடுதல் நடத்த புறப்பட்டனர்.

இவர்களை திக்கோடை, 40ஆம் கிராமம் பகுதிகளில் வழிமறித்த புலிகள் கடும் தாக்குதலை ஆரம்பித்தனர் தாக்குதல் சில மணிநேரங்கள் நீடித்தன அப்போது ஹெலி ஒன்று அப்பகுதியில் தரையிறங்கிச் சென்றது.

புலிகளின் தாக்குதல் பலமானதையடுத்து படையினர் தமது முகாம்களுக்கு பின் வாங்கினர் இவ்வாறு படையினர் முகாம் சென்ற போது வழியில் அகப்பட்ட 4தமிழ் மக்களை சுட்டுக்கொன்றனர் ஐவரை கைது செய்து கஞவாஞ்சிக்குடி முகாமிற்கு கொண்டுசென்றனர்,

இம்மோதலின்போது புலிகள் தரப்பில் வேணு (சி சுந்தரமூர்த்தி) வீரச்சாவு எய்தினார்

எதிரணியின்...

பயன்படுத்தி வடக்கு கிழக்கில் இருவார யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தவே பாதயாத்திரை பயன்படப் போகின்றது எனவும் தீவிரவாத சிங்கள அமைப்புகள தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளன.

பருத்தித்துறை...

செல்வதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது

இதேசமயம் பருத்தித்துறை பகுதியில் கடந்த இருதினங்களாக சி- பிளேன் நடமாட்டத்தையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. 08, 15

# மூன்று நபருக்கு ஒருவர் மக்கள் வங்கி வாடிக்கையாளர்

இலங்கையில் மூன்று நபருக்கு ஒருவர் மக்கள் வங்கியின் வாடிக்கையாளர் என அண்மையில் மக்கள் வங்கி கணக்காளர் நாயகத்தின் அறிக்கையை மேற்கோள் காட்டி அறிவித்துள்ளது.

வங்கியின் தற்போதைய வைப்புத்தொகை 32 பில்லியன் ரூபா எனவும் 5 மில்லியன் வாடிக்கையாளரைக் கொண்டது எனவும் மக்கள் வங்கியின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# துருக்கிக்கு உதவ சர்வதேச ஏற்பாடு

கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பட்ட நிலநடுக்கத்தினால் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் துருக்கிக்குஉதவ சர்வதேசரீதியில் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன

ஐரோப்பிய பொருளாதார சமுகத்தினர் 6 இலட்சம்அமெரிக்க டொலரை உதவ முன்வந்திருக்கிறார்கள் 29 தொன் உணவுப் பொருள்களை சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் அனுப்பியுள்ளது இன்னும் பல நாடுகள் தத்தமது பங்களிப்பைச் செய்ய முன்வந்துள்ளன

துருக்கியின் கிழக்கு மாநிலத்தில் எர்கிஸதான் நகரில் ஏற்பட்ட இந்தப் பேரழிவில் அறுநூறுக்கு மேற்பட்டோர் இறந்திருக்கலாம் எனவும் இரண்டாயிரத்துக்கு மேற்பட்டோர் காயமடைந்திருக்கலாம் என்றும் பிந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

இடிபாடுகளுக்கிடையே பல நூற்றுக்கணக்கானோர் உயிர் தப்ப வழியின்றி இறந்துள்ளனர் எனவும் அஞ்சப்படுகிறது

### அணு ஆயுதபரவல் தடுப்பு

# இந்தியா இணங்கக்கூடாது பாரதிய ஜனதா கோரிக்கை

அணு ஆயுத பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடக்கூடாது எந்தவொரு நாட்டுடனும் அணு ஆயுதப் பிரச்சினையில் தன் நிலை வழுவாமல் இருதரப்புப் பேச்சுவார்த்தையை இந்தியாநடத்துவதைபாரதிய ஜனதாக்கட்சி எதிர்க்கவில்லை

இவ்வாறு பாரதிய ஜனதாக் கட்சியின் தேசிய செயற்குழுவின்மூன்றுநாள்கூட்டமுடிவில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கட்சித் தலைவர்களில் ஒருவரான முரளி மனோகர் ஜோஷி பட்ஜட் பற்றிக் கருத்து தெரிவிக்கையில் விவசாயம் தொழில் முயற்சி மருந்து வகைகள் என்பன பற்றிடங்கள் யோசனைகளை அரசு மீண்டும் பரிசீலிக்க வேண்டும் என்றும் தெரிவித்த அவர் பட்ஜட் கிராம மக்களின் நல்வாழ்வுக்கு எதிரானது என்றும் சொன்னார்.

பஞ்சாபில் ராஜீவ் - லோங்கோவால் ஒப்பந்தம் அமுல்படுத்தப்பட வேண்டும் என்றும் இது அரசியல் தீர்வுக்கு வழிகோலும் என்றும் மற்றொரு தலைவர் வாஜ்பாய் தெரிவித்தார்.

# ஹெலி சூடு

நேற்றிரவு 8 மணியளவில் கோப்பாய் பகுதியை வட்டமிட்ட ஹெலிகப்டர் ஒன்று பரவலாக துப்பாக்கிச் சூடு நடத்தியது. 51, 06

# பங்குபற்றாதாம்

எதிர்க்கட்சிகள் மேற்கொள்ளும் பாதயாத்திரையில் சமசமாஜக்கட்சியும் கொம்யூனிஸ்ட் கட்சியும் பங்குபற்றமாட்டாது என ஒப்சேவர் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.


உ
சிவமயம்

புளியம்பொக்கணை நாகதம்பிரான்

# ஆண்டுற்சவப் பொங்கல் - 1992

மேற்படி ஆலய ஆண்டுற்சவப் பங்குனி உத்தரப் பொங்கல் எதிர்வரும் 18, 3 92 புதன்கிழமை பகல்முழுவதும், இரவும் 19 03, 92 வியாழன் அதிகாலை வரை நடைபெறும்.

இவ் வருடப்பொங்கல் கடந்தவருடத்தைப் போலன்றி வழமையாக நடாத்தி முடிக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது என்பதை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்,

முக்கிய குறிப்புகள்:- போக்குவரத்து வசதியின்மையால் வழமைபோல் சாவகச்சேரியில் இருந்து பண்டம் கொண்டுவர முடியாதுள்ளமையால் பண்டம் எடுக்கும் வைபவம் கோயிலடியிலேயே இடம்பெறும். போக்குவரத்து வசதிகளை தனியார் வாகனங்களும், மினிபஸ் பகுதியினரும் மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

ஆலய வீதியில் வியாபாரம் செய்ய விரும்புபவர்கள் 16 03. 92 (இன்று) திங்கள் நண்பகலிற்கு முன் கடைக்குரிய முழுப்பணத்தையும் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெறவும் அதன் பின் எவரின் விண்ணப்பங்களும் ஏற்றுக்கொளளப்படமாட்டாது.

சொக்கலிங்கம் அமிர்தலிங்கம்
தலைவர்
மேலதிக அரசாங்க அதிபர் (நிர்வாகம்)
கிளிநொச்சி.

நா வீரகத்திப்பிள்ளை ஐங்கரன்
பொருளாளர் - பிரதம பூசகர்

சி. சு. சின்னத்தம்பி
இணைக்காரியதரிசி

03032


இப்பத்திரிகை முரசொலி பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்)லிமிற்றெட் நிருவனத்தினரால் யாழ்கல்விளங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மிபில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 16-03-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது